வாசகர் கடிதம்

முதுகெலும்பில்லாத ஒருபேப்பர்

அரசியலில் ஒரு பேப்பர் ஒரு தளம்பல் நிலையை எடுக் கிறது போலை எனக்குப் படுகிறது. போகிற போக்கில் அமிர்தலிங்கம் தமிழினத் தலைவர் என்றும் கருணா தேசியத் தலைவர் என்றும், டக்ளஸ், சங்கரி போன்றோரை தமிழின இரட்சகர்கள் என்றும் எழுதுவீர்கள் போல இருக் கிறது. நக்கலுக்காக இதனை எழுதவில்லை. உண் மையை எழுதுகிறேன். ஆனால் அதைக் கோபத்தில் எழுது கிறேன். தேச விரோதிகளையும் தேசத்துத் துரோகி களையும் காட்டிக் கொடுப்போரையும் தமிழினத் தலைவர் களாகவும் தியாகிகளாகவும் ஒரு பேப்பர் ஆக்கிவிடும்.

இறுதியாக வந்த இரண்டு ஒரு பேப்பர் இதழ்களிலும் அமிர் தலிங்கத்தை ஜோர்மனி வீ.சபேசன் அவர்கள் தியாகியாக இலட்சியப் பற்றுக் கொண்ட ஒரு தலைவராக சித்தரி க்க முயன்றுள்ளார். (சபேசனுக்கு என் திருமண வாழ்த்துக் கள்) அதனால் அவர் கொல்லப்பட வேண்டியவரல்லர், மாத்தையாதான் அந்தக் கொலைகளுக்குக் காரணம் என்று எழுதுகிறார். 'கிளெய்ம்' பண்ணவில்லை. ஆனால் அவரது கொலைக்கான காரணத்தையும் யார் அதனைச் செய்திருப்பார்கள் என்றும் ஊகிக்க முடிகிறது.

இந்திய ஆக்கிரமிப்புப் படை ஈழத்தை ஆண்ட காலத்தில் அந்தக் கொலை தவிர்க்க முடியாது. எமது தேசியத் தலைவரின் 50வது அகவை நூலான 'விடுதலைப் பேரொளி' நூலில் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் இத்தகவலை சூசகமாகவும் புரியும் படியாகவும் எழுதி (பக். 292) விடுகிறார்.

சி. புஸ்பராசா எழுதிய 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்ற நூலில் அமிர்தலிங்கத்திற்கும் இந்திய ஆக்கிரமிப்பாளருக்குமிடையிலான உறவு பற்றியும், இந்தியத் தூதர் டிக்சிற், அமிர்தலிங்கத்தை அழைத்து முதலமைச்சர் பதவியை ஏற்கும்படி கேட்டதையும் அமிர்தலிங்கம் 'வென்று விட்டோம்' என்று பெருமிதச் சிரிப்பு சிரித்ததையும் குறித்திருக்கிறார். இப்படிப் பார்க் கையில் துரையப்பா, அமிர்தலிங்கம், கதிர்காமர், சங்கரி, டக்ளஸ், கருணா என்ற வரிசையில் அமிர்தலிங்கம் ஜம்மென்று உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம். சபேசன் அவர்கள் இன்னும் நிறைய அறிந்து, படித்து, யாவற்றையும் சரியாக இனம் காண வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இலண்டனில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு பற்றி ஒரு 'தேச' விரோதி எழுதுகிறாரே! அதை எப்படி ஒரு பேப்பர் இல் போடுவீர்கள். அவர் தனது இணையத்தளத்தில் ஒரு பேப்பர் ரைப் பற்றி அதன் ஆசிரியர்கள் இருவரைப் பற்றி எழுதப் போகிறேன் என்று வெருட்டினாரே? அதற்குப் பயந்து விட்டீர்களா? அவரை 'தாஜா' பண்ணுவதற்காக 'தேச' விரோதியின் கட்டுரைகளைப் பிரசுரித்தீர்களா? அல்லது பத்திரிகையாளர் நாங்கள் நடுநிலைமையைப் பேணுகிறோம் என்று 'பிரமுகர்'த்தனத்தில் பிரசுரித்தீர் களோ? 'தேச' விரோதியின் கட்டுரையை ஒரு பேப்பரில் பார்த்த பின் ஒரு பேப்பர் ரிலேயே அரியண்டம் வருகிறது. ஒரு பேப்பர் ருக்கு முதுகெலும்பு இல்லை என்பதையும் புரிந்து கொண்டேன்.

இதயச்சந்திரனின் அரசியல் ஆய்வுகள் மதிப்பிற் குரியதொன்று. இப்போது அவர் மீதான மதிப்பும் எனக்குப் போய்விட்டது. ஒரு பேப்பர் ரில் பத்திரிகையாளர் மாநாடு பற்றி எழுதும்போது 'தேசம் ஆசிரியரும்' கலந்து கொண்டது அம்மாநாட்டின் சிறப்பம்சம் என்று எழுதுகிறார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் எல்லோரையும் இணைத்துக் கொள்வது அவசியம்தான். யார் இணைவுக்குரியவர், யார் அணைப்புக்குரியவர் என்பதில் தெளிவு அவசியம். தேச விரோத நிலைப்பாடு எடுக்கும் தேசம் அணைப்புக் குரியதா? எல்லோரும் தேவையென்பதற்காக டக்ளஸ், சங்கரி போன்ற தேசத் துரோகிகளை நாம் அணைத்துக் கொள்வோமா?

ஆனால் இதயச்சந்திரன் எங்கள் வட்டத்துக்குள் வருகின்ற / வரவேண்டிய சேரன் அவர்களை அடித்துத் துரத்துகிறார். இதுதான் இதயச்சந்திரனின் அரசியல். ஒரு பேப்பர் இன் அரசியலும் இதுதானா?

- அடியான்

சினிமாக் கோமாளிகள்

ஒரு பேப்பர் நிர்வாகத்தினருக்கு வணக்கம்.

இதழ் வெளியீடு 93ல் திரு.அநபாயன் அவர்களின் அமுல் பேபியும் புவி அரசியலும் என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரை இன்றைய காலத்தின் தேவை.

எமது தேசம் ஒரு விடியலை நோக்கி செல்லும் போது எமது இளம் சமூகத்திற்கு மிகவும் தேவையான காத்திரமான செய்திகள்.

இந்த கீழ்மட்ட சினிமா கோமாளிகளின் வார்த்தை சல சலப்புக்களுக்கு நமது சமூகமும் எம் தேசமும் எப்போதும் அடிமை கொண்டதில்லை என்பதை பலமுறை உணர்த் தப்பட்ட பின்பும் இவை போன்ற சினிமாத்தன தனி நபர்கள் மற்றும் அரசியல் வியாபாரிகளின் செயல் பேச்சுக்களையும், செயற்பாடுகளையும் எம் சமூகம் முழுமையாக நிராகரிக்கவேண்டும்.

ஏமாற்றுக் குழுக்கள் எங்கள் மத்தியில் இருக்கும் வரை இவை போன்ற சின்னத்தன சினிமா மோக வர்த்தக வியாபாரிகளும், சினிமா விளம்பர வானொலிகளும் இவர்களின் வசன மேடைப் பேச்சுக்களுக்கு களம் அமைக்கின்றன.

புலம் பெயர் நாடுகளிலுள்ள எமது சமூகம் ஒரு உறுதிப்பாட்டிற்கு வர முயற்சிக்க வேண்டும். தமிழ் சினிமாவையும் அது சார்ந்தவை மற்றும் நிகழ்வுகள் யாவையும் முற்று முழுதாக நிராகரிக்கவேண்டும்.

நாங்கள் விஞ்ஞான காலத்தில் வாழ்கின்றோம். விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் செயற்பாட்டிற்கு ஒப்பவே எங்களையும், எமது தேச தேசியத்தை நாம் ஒன்றினைக்க முயற்சிக்கின்றோம்.

இவை போன்றவற்றிற்கு புலம் பெயர் நாடுகளில் இயங் கும் பத்திரிக்கைகள், வானொலிகள், தொலைக்காட்சி நிறுவனங்கள் மற்றும் சினிமா வர்த்தக வியாபாரிகளும் தங்களின் வர்த்தக செயற்பாடுகளில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் இறைவன் அய்யங்கர் சுவாமியாலோ அல்லது வர்த்தக விளம்பர சினிமா புகழ் உலகத் தமிழ் வானொலியாலோ எதையும் காப்பாற்ற முடியாது.

எங்களின் தமிழ் தேசியமும் எமது வாழ்வும் ஒளி பெறும் காலம் மிக விரைவில்...

- இரா. திலீபன்

வீண்வாதம் எதற்கு?

ஒரு பேப்பர் பத்திரிகையை தொடர்ந்து படித்து வருபவன் யான். ஒரு பேப்பர் என்கின்ற பெயரும் அதன் மொழி நடையும் எனக்குச் சற்றும் உடன் பாடான தல்ல. எழுத்துப் பிழைகள் மலிந்தும், அதைவிட இலக்கணப் பிழைகள் மலிந்தும் உள.

யான் எழுதுகின்ற இம்மடலை ஓர் அம்சமும் பிறழாமல் அப்படியே அச்சு வாகனம் ஏற்றுவீர்களானால் பாதகம் இல்லை. அல்லவெனில் தங்களிடம் குப்பைக் கூடை உளது தானே? இம்மடலை அதனுள் கிழித்துப் போட்டு விடுங்கள்.

நிற்க, யான் எழுத வந்த காரியம் இதுதான். ஒரு பேப்பர் இல் எழுத்துப்பிழைகள், இலக்கணப் பிழைகள் மலிந்து காணப்பட்ட போதிலும் அணிகள் பற்றி தம்பி சபேசன் அவர்கள் தொடர்ந்து எழுதிவரும் கட்டுரை மிக்க பயனுள் ளதாகும். எவர் இதனை வாசிக்கின்றார்களோ இல்லையோ யான் இதனைத் தொடர்ந்து வாசித்து அகம் மகிழ்வேன்.

தம்பி சபேசன் மேற்குறித்த கட்டுரையின் தொடக்கத்தில் ஒரு கருத்தினைப் பகிர்ந்திருந்தார். அதாவது அணிகள் பற்றி அறியாதவர்கள் கவிதை எழுதுகி றார்கள். அது கவிதைக்கு ஆரோக்கியம் அல்ல என்றும் கருத்துப்பட தம்பி சபேசன் எழுதியிருந்தார். அப்படிச் சொல்லியிருந்தது எனக்கு உவப்பைத் தரவில்லை. நெஞ்சுள் கவிதை எழுந்தால் அது பீறிட்டு வெளிவரும். அதற்கு அணிகள் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் யாதொன்றும கிடையாது.

கவிதைகள் காலத்துக்குக் காலம் பல திறத்துப் பாவகைகளால் யாக் கப்பட்டது. சங்ககாலத்தில் அகவற்பாவில் (ஆசிரியப்பா) தொடங்கிய கவிதை பின்னர் கலிப்பா, விருத்தப்பா, வெண்பா வரை மாற்றம் கண்டு தற்பொழுது புதுக் கவிதை என்னும் வடிவத்தில் வளம் பெறுகிறது. (புதுக்கவிதை என்னும் சொல் பொருத்தமற்றது என்பது என் துணிபு. அந்தந்தக் காலத்துக்கு அந்தந் தப் பாவகைகள் புதுக்கவிதைதான்) இடையில் எங்கள் நாட்டு மகாகவி (து. உருத்திரமூர்த்தி) 'குறும்பா' என்னும் பாவகையையும் தமிழுக்குத் தந்திருந்தார்.

'பழைய கழிதலும் புதிய புகுதலும்
வழுவல்ல கால வகையினானே

என்று பதின் மூன்றாம் நூற்றாண்டில் பவணந்தி முனிவர் நன்னூலில் சூத் திரம் எழுதி வைத்துள்ளார். எனவே தம்பி சபேசனுக்கு எனது வேண்டுகோள், மரபை மீறுவது தவறல்ல. மரபைத் தெரிந்து வைத்து மீறினால் கூடுதல் மகிழ்வு. தெரியாமல் மீறினால் அது ஒன்றும் பாவமான காரியம் அல்ல.

தம்பி இளங்கோ அவர்களுக்கும் யான் ஒன்று சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். திருவள்ளுவர் இந்துவா இல்லையா என்பது இப்பொழுது எமது பிரச்சினை அல்ல. யான் அறிந்த வகையில், திருக்குறளை ஓரளவு ஊன்றிப் படித்த வகையில் திருவள்ளுவர் மதங்களைக் கடந்தவர்.

இன்னுமொன்றையும் கவனிக்க வேண்டும். திருவள்ளுவரின் காலத்தில் (கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு) சைவம், வைணவம் ஆகிய வைதிக மதங்கள் தமிழர் சமூகத்தில் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. சமணம், பௌத்தம் ஆகிய அவைதிக மதங்களே தமிழர் சமூகத்தில் வளர்ச்சி பெற்றிருந்தன. திருவள்ளுவரின் குறள் ஒன்றையே நாம் இங்கு உதாரணம் கொள்ளலாம்.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா இவ்வுலகம் பழித்தது ஒழித்து விடின்'

அஃதாவது இவ்வுலகம் பழிக்கின்ற செயல்களை நீக்கி விட்டால், தலை முடியை மழிக்கவோ நீளமாக வளர்க்கவோ தேவையில்லை. இஃதே குறளின் பொருள் என்பது பரிமேலழகரின் துணிபு.

இதனை மேலும் வியாக்கியானம் செய்வதாக இருந்தால் பௌத்த துறவிகள் தலைமயிரை மழித்து மொட்டையாகக் காட்சி தரு வார்கள் சமணத் துறவிகள் தலைமயிரை, தாடியை நீட்டமாக வளர்த்தி ருப்பார்கள். இரண்டும் தேவையில்லை என்கிறார்வள்ளுவர்.

தம்பி இளங்கோவுக்கு யான் ஒன்று சொல்வேன். வீண் வாதம் எதற்கு? இப்பொழுதுள்ள இளந்தமிழச் சமூகத்திற்கு எவையெவை தேவையோ அவை குறித்து ஆராய்ச்சி செய்வது நல்லது என நம்புகின்றேன். தவறாக யான் ஏதாவது எழுதியிருந்தால் மன்னித்தருள வேண்டும். நன்றி

- பண்டிதர் அம்பலப்பிள்ளை

Mortgages – Re-mortgages – Commercial Loans

Mortgages

Re-mortgages

Business Loans for Shops

Petrol Station & Hotels

Call **Pon Siva**

Tel: **020 8683 1313**
Mob: **07958 953 199**
Fax: **020 8684 0444**

Portland Estate Agents UK Ltd
9 St. James Road
Croydon, Surrey, CR0 2SB.